**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 92/2017**

**வாதி தரப்பு சாட்சி–2 ஸ்ரீதர் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 15.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீதர் | கிராமம் | வரவணை |
| த/பெ / க/பெ. | ரவி | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | |

<u>**முதல் விசாரணை**</u>

1) இவ்வழக்கில் கடவூர் வட்டாட்சியருக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. கடவூர் வட்டாட்சியர் சார்பாக வாய்மொழி உத்தரவின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் கடவூர் வட்டம், வரவணை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். சர்வே எண் 959/2 என்பது நத்தம் நிலமா என்றால் ஆமாம். அடங்கல் நகலில் சர்வே எண் 959/2 என்பது சர்க்கார் புறம்போக்கு நத்தம் நிலம் என கண்டுள்ளது என்றால் சரிதான். **அந்த அடங்கல் சா.சா.ஆ.1, சர்வே எண் 959 ற்கான புல வரைபடம் சா.சா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது,** சர்வே எண் 959/12 யார் பெயரில் பட்டா உள்ளது என்றால், சண்முகம், கண்ணன், சீனிவாசன் ஆகியோர் பெயரில் உள்ளது.

2) சர்வே எண் 959/2 ல் யாருக்காவது நில ஒப்படைப்பு செய்யப்பட்டதாக எங்கள் ஆவணங்களில் உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண் 959/12 க்கு வடபுறம் சர்வே எண் 959/2 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 959/3 மற்றும் சர்வே எண் 959/4 ற்கு மேற்குபுறம் சர்வே எண் 959/2 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 959/12 ற்கு வடபுறத்திலும், சர்வே எண் 959/3 மற்றும் சர்வே எண் 959/4 ற்கு மேற்குபுறத்திலும் உள்ள

நிலத்தை யாருக்காவது நில ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதா என்றால், ஆவணங்களை சரிபார்த்துதான் சொல்ல முடியும்.

ஆவணங்களை சரிபார்ப்பதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**